


**24.11. 2024**

**தலைப்புச் செய்திகள்**

**1.** தேசிய மாணவர் படையில் இளைஞர்கள் அதிக அளவில் இணைந்து சேவையாற்ற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

**2.** நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக புதுதில்லியில் இன்று அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது.

**3.** தமிழக அரசு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**4.** நெசவாளர்களுக்கு தொழில்வரி விதிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி தெளிவுபடுத்தியுள்ளார்.

**5.** பெர்த்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன் 5 விக்கெட் இழப்பிற்கு 396 ரன் எடுத்திருந்தது.

**இனி விரிவான செய்திகள்**

*********

**பிரதமர் - மன்-கீ-பாத்**

தேசிய மாணவர் படையில் இளைஞர்கள் அதிக அளவில் இணைந்து சேவையாற்ற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன்-கீ-பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 116ஆவது முறையாக இன்று உரையாற்றிய அவர், இளைஞர்கள் இடையே ஒழுக்கம், தலைமை பண்பு மற்றும் சேவை உணர்வை தேசிய மாணவர் படை உருவாக்குவதாக கூறினார்.

தேசிய மாணவர் படை தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, தமது மாணவர் படை அனுபவங்களை நினைவு கூர்ந்த பிரதமர், நடப்பாண்டு 20 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளதாக தெரிவித்தார்.

நாடுமுழுவதும் ஐந்தாயிரம் புதிய பள்ளி மற்றும் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையை தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறிய பிரதமர், NCC-இல் 40 சதவிகிதம் பெண்கள் சேவையாற்றுவதாக தெரிவித்தார்.

தாயின் பெயரில் மரம் நடுவோம் பிரச்சாரத்தின் மூலம் கடந்த 5 மாதங்களில் 100 கோடி மரங்கள் நடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதமர், இந்த இயக்கத்தின் கீழ், மரக்கன்றுகளை நட்டு செல்ஃபி எடுத்து mygov.in இணையதளத்தில் பதிவிடுமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த பிரச்சாரம் தற்போது உலக நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

அரசு அலுவலகங்களில் குப்பைகளை அகற்றும் ஸ்வச்சதா அபியான் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதமர் "கழிவுகளிலிருந்து செல்வம்" என்ற கருத்தின் அடிப்படையில் இளைஞர்கள் "குப்பைகளை நிர்வகிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் வரும் ஜனவரி 12ஆம் தேதி இளையோர் தினமாக கொண்டாடப்பட உள்ளதை அடுத்து, அன்றைய தினம் புதுதில்லியில் விக்சித் பாரத் இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சி நடைபெற உள்ளதாக பிரதமர் அறிவித்தார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நாடுமுழுவதிலும் இருந்து இரண்டாயிரம் இளைஞர்கள் பங்கேற்க உள்ளதாக பிரதமர் கூறினார்.

அரசியல் பின்னனி இல்லாத குடும்பங்களை சேர்ந்த இளைஞர்களை அரசியலில் இணைக்கும் வகையில் நடைபெறும் இத்தகைய முயற்சிகள் பெரும் பயனளிக்கும் என்றார்.

இணைய மோசடிகளிலிருந்து மூத்தகுடிமக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளதாக எடுத்துரைத்த பிரதமர் சட்டத்தில் டிஜிட்டல் கைதுக்கான முகாந்திரம் எதுவும் இல்லை என்று தெளிவுபடுத்தினார்.

வாசிப்பு பழக்கத்தின் முக்கியத்துவம் குறித்து பேசிய அவர் புத்தகங்கள் மனிதர்களின் சிறந்த நண்பன் என்றும், நூலகங்களின் வாயிலாக இந்த நட்பை வலுப்படுத்த முடியும் என்றும் கூறினார்.

சென்னையில் **பிரகரித் அறிவகம்** என்ற பெயரிலான நூலகம் அமைக்கப்பட்டுள்ளதற்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

புலம் பெயர் இந்தியர்கள், வெளிநாடுகளில் தங்களது முத்திரையை பதித்த கதைகளை நமோ செயலி அல்லது mygov இணையதளத்தில் பகிர்ந்துகொள்ளுமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பண்டைய கடல்சார் திறன் தொடர்பான ஆதாரங்களை பாதுகாப்பதற்கான பிரச்சாரமும் தற்போது நடைபெற்று வருவதாக குறிப்பிட்ட பிரதமர், இதற்கென குஜராத் மாநிலம் **லோதலில்** மிகபெரிய அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருவதாக கூறினார்.

இந்திய கலாச்சாரத்தை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், ஸ்லோவேக்கியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை பாராட்டிய பிரதமர், இத்தகைய முயற்சிகள் நாட்டின் கலாச்சாரம் உலக அளவில் கொண்டு செல்லப்பட்டுள்ளதை எடுத்துரைப்பதாக கூறினார்.

உயிரி பண்முக தன்மையை பராமரிப்பதில் சிட்டுக்குருவிகள் முக்கிய பங்கு வகிப்பதாக கூறிய பிரதமர் நகரமயமாக்கல் காரணமாக தற்போது நகரங்களில் இவை குறைந்த எண்ணிக்கையில் காணப்படுவதாகவும், அவற்றை மீட்டெடுக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

சென்னையில் செயல்பட்டு வரும் கூடுகள் அறக்கட்டளை கடந்த 4 ஆண்டுகளாக பள்ளி குழந்தைகளுக்கு சிட்டுக்குருவிகளுக்கான கூட்டை அமைப்பது தொடர்பான பயிற்சி அளித்து வருவதற்கு பாராட்டு தெரிவித்த பிரதமர், இதன்மூலம் சுற்றுவட்டாரங்களில் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக கூறினார்.

குழந்தைகளிடையே இயற்கையின் மீதான பொறுப்புணர்வை ஏற்படுத்த இயற்கை கல்வியின் தொகுப்பை மைசூரில் உள்ள ஓர் அமைப்பு உருவாக்கியுள்ளதாக கூறிய பிரதமர், மக்களிடமிருந்து வரும் இதுபோன்ற கருத்துக்கள், கடிதங்கள், மற்றும் ஆலோசனைகள் தமக்கு ஊக்கம் அளிப்பதாகவும், மனதின் குரல் நிகழ்ச்சியை செம்மை படுத்துவதற்கு அவை உத்வேகம் அளிப்பதாகவும் பிரதமர் கூறினார்.

*********

**பிரதமர் - ஒடிசா**

புதுதில்லியில் நடைபெறும் ஒடிசா பார்பா 2024 நிறைவு நாள் நிகழ்ச்சியில் பிரதமர் இன்றுமாலை பங்கேற்கிறார்.

கடந்த இரண்டு நாட்களாக நடைபெறும் இந்நிகழ்ச்சியில் ஒடிசா மாநில பாரம்பரித்தை பாதுகாத்து மேம்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

*********

**குளிர்கால கூட்டத்தொடர்**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நாளை தொடங்க உள்ள நிலையில் மத்திய அரசு அழைப்பு விடுத்த அனைத்து கட்சி கூட்டம் இன்று நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறுவது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு,

மத்திய அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல்,

காங்கிரஸின் திரு.ஜெயராம் ரமேஷ், திரு.பிரமோத் திவாரி,

திமுகவின் திரு.டி.ஆர்.பாலு, திருச்சி சிவா,

மதிமுகவின் திரு.வைகோ உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் 20ஆம் தேதிவரை நடைபெறும்.

*********

**ஜெய்சங்கர்**

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறைபயணமாக இன்று இத்தாலி செல்கிறார்.

ஃபிஜியில் ஜி-7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றும் அவர் இந்நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

ரோமில் இந்திய தூதரகத்தின் புதிய வளாகத்தையும் அமைச்சர் திறந்துவைக்க உள்ளார்.

*********

**உதயநிதி**

தமிழக அரசு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நாகையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் பயன்பெறுவதாக தெரிவித்தார்.

**வாய்ஸ்**

தொடர்ந்து அவரித்திடலில் 2 ஆயிரத்து 400 பயனாளிகளுக்கு பல்வேறு நல திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் வழங்குகிறார்.

*********

**காந்தி**

நெசவாளர்களுக்கு தொழில்வரி விதிப்பது குறித்து எவ்வித அறிவிப்போ, அரசாணையோ வெளியிடப்படவில்லை என்று மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி தெளிவுபடுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நெசவாளர்களுக்கு தொழில்வரி விதிக்கப்படுவதாக வெளிவந்த செய்திகள் தவறானவை என்று கூறியுள்ளார்.

*********

**செந்தில்பாலாஜி**

ஜவுளி ஏற்றுமதி பேருந்து கட்டுமானம் கொசுவலை உற்பத்தி உள்ளிட்ட தொழில்களில் கரூர் மாவட்டம் சிறந்து விளங்குவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

கரூரில் "விஷன் 2030" குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் மாவட்டத்தின் வர்த்தக இலக்கை 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வரும் 2030ஆம் ஆண்டிற்குள் எட்ட அறிவுறுத்தினார்.

இப்போட்டியில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

*********

**தங்கம் தென்னரசு**

கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் **கல்லூரணியில்** 12 லட்ச ரூபாய் மதிப்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், பெண்களின் நலனை கருத்தில் கொண்டு மாநில அரசு செயல்படுவதாக கூறினார்.

*********

**சேகர்பாபு**

யானைகளுக்கு புத்துணர்வு முகாம் நடத்துவது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் கோவில் யானை தாக்கி உயிரிழந்த யானை பாகன் குடும்பத்திற்கு நிவாரண உதவிகளை வழங்கிய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உயிரிழந்த பாகன் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு பணி வழங்கப்படும் என்றார்.

*********

**மதிவேந்தன்**

நாமக்கல் மாவட்டம் அணைபாளையத்தில் 10 கோடியே 38 லட்ச ரூபாய் மதிப்பில் ராசிபுரம் புதிய பேருந்து நிலையத்திற்கான கட்டுமான பணிகளுக்கு மாநில ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் இன்று அடிக்கல் நாட்டினார்.

*********

**வாக்காளர் முகாம்**

தமிழ்நாட்டில் 2ஆவது கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாம் இன்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெறுகிறது.

வரும் ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு நடைபெறும் இம்முகாம்களில் புதிய வாக்காளர்கள் தங்களது பெயரை பதிவுசெய்து கொள்ளலாம்.

*********

**இருவரி**

**சிவகங்கை மாவட்டத்தில் பருவமழை** காரணமாக ஏற்படும் தொற்று நோய் தடுப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 199 இடங்களில் நடைபெற்ற மருத்துவ முகாம்களில் 45 ஆயிரத்து 492 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

**பெரம்பலூரில் மாற்றுத்திறனாளிகளுக்கான** விளையாட்டு போட்டிகள் மாவட்ட விளையாட்டரங்கில் வரும் 28ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**தேனியில் சர்க்கரை நோய் குறித்த** விழிப்புணர்வு நடைபோட்டியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சிவபிரசாத் இன்று தொடங்கிவைத்தார்.

*********

**வானிலை**

தென்கிழக்கு வங்க கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை காற்றழுத்த தாழ்வுமண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும் இதனால் தமிழக கடலோர பகுதிகளில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

*********

**தேர்பவனி**

மயிலாடுதுறை மாவட்டம் புனித சவேரியார் ஆலய ஆண்டு திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

10 நாட்கள் நடைபெறும் இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேர்பவனி வரும் 2ஆம் தேதி நடைபெறுகிறது.

*********

**கிரிக்கெட்**

பெர்த்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3ஆம் நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் தேனீர் இடைவெளியின்போது 5 விக்கெட் இழப்பிற்கு 400 ரன் எடுத்திருந்தது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

இந்தியா 150.

ஆஸ்திரேலியா 104.

*********

**2025 ஐ.பி.எல் கிரிக்கெட் தொடருக்கான வீரர்களின் ஏலம்** சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

*********